# மார்ச் 7 நடப்பு நிகழ்வுகள்

*(TNPSC, SSC, BANK, UPSC, RAILWAY)*


Visit Us - [https:// tamil.examsdaily.in](https://tamil.examsdaily.in)

Face book - ExamsDaily Tamil

## தமிழகம்

### 19 ஐஏஎஸ் அதிகாரிகள் திடீர் மாற்றம்

- தமிழகம் முழுவதும் 19 ஐஏஎஸ் அதிகாரிகளை அதிரடியாக மாற்றி தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.
- இதற்கான உத்தரவை தமிழக அரசின் தலைமைச் செயலாளர் கிரிஜா வைத்தியநாதன் பிறப்பித்துள்ளார்.

### தமிழகம், புதுச்சேரியில் முதல்முறையாக பிளஸ் 1 பொதுத்தேர்வு தொடக்கம்

- தமிழகம் மற்றும் புதுச்சேரியில் 7,070 பள்ளிகளில் இருந்து 8 லட்சத்து 61 ஆயிரத்து 915 மாணவ-மாணவிகள், 1,753 தனித்தேர்வர்கள் பேர் என மொத்தம் 8 லட்சத்து 63 ஆயிரத்து 668 பேர் முதல் அணியாக பிளஸ் 1 பொதுத்தேர்வை எழுதுகிறார்கள்.
- இதற்காக தமிழகத்திலும் புதுச்சேரியிலும் 2,795 தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

### மதக் கலவரம் பரவுவதை தடுக்க இலங்கையில் சமூக வலைதளங்கள் முடக்கம்

- இலங்கையில் மதக் கலவரம் பரவுவதை தடுக்க அந்நாடு முழுவதும் பேஸ்புக், வாட்ஸ் அப், வைபர் உள்ளிட்ட சமூக வலைதளங்கள் முடக்கப்பட்டுள்ளன.

## இந்தியா

### மத்திய அரசு ஊழியர்களுக்கு 2 சதவீதம் அகவிலைப்படி உயர்வு

- மத்திய அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படியை 2 சதவீதம் உயர்த்த பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இதன் மூலம், 50 லட்சம் மத்திய அரசு ஊழியர்கள், 55 லட்சம் ஓய்வூதியதாரர்களுக்கு என ஒரு கோடிக்கும் மேலானவர்கள் பயன் பெறுவார்கள்.

### மகளிர் தினம் முன்னிட்டு ரூ.8-க்கு சிறுநீரகப் பரிசோதனை: டெல்லியில் (08.03.2018)

- உலக மகளிர் தினமும் உலக சிறுநீரக தினமும் ஒன்றாக இணைந்து வருவதை முன்னிட்டு டெல்லியில் இயங்கிவரும் லைப்லைன் ஆய்வகம் அனைவருக்கும் பயன்படும்வகையில் ஒரு சிறப்பு முகாமுக்கு ஏற்பாடு செய்துள்ளது.
- மார்ச் 8 மகளிர்தினம் முன்னிட்டு ரூ.8க்கு சிறுநீரகப் பரிசோதனை செய்யப்படும். 08.03.201 காலை 10 முற்பகல் தொடங்கி மாலை 6 மணிவரை இவ்வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### ‘‘நீட் தேர்வுக்கு ஆதார் எண் கேட்கக்கூடாது’’ - உச்ச நீதிமன்றம் உத்தரவு

- நீட் தேர்வு எழுதுபவர்களிடம் ஆதார் எண்ணை கட்டாயப்படுத்தி கேட்கக்கூடாது என சிபிஎஸ்இ எனப்படும் மத்திய இடைநிலை கல்வி வாரியத்திற்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

### லெனின் சிலை உடைப்பு எதிரொலி

- திரிபுரா மாநிலத்தில் கம்யூனிஸ்ட் புரட்சியாளர் லெனின் சிலையையும், வேலூரில் பெரியார் சிலையையும் பாஜகவினர் உடைத்தற்கு பதிலடியாக, மேற்கு வங்காள மாநிலத்தில் உள்ள ஜாதவ்பூர் பல்கலை மாணவர்கள் பாஜக நிறுவனர் ஷியாமா பிரசாத் முகர்ஜியின் சிலையை உடைத்து முகத்தில் கறுப்பு மை பூசினர்.

## உலகம்

### உலக பெரும் பணக்காரர்கள் பட்டியல்:

- போர்ப்ஸ் பத்திரிக்கை வெளியிட்டுள்ள உலகின் பெரும் பணக்காரர்கள் பட்டியலில் அமேசான் நிறுவனத்தின் தலைவர் ஜெப் பெஸோஸ் முதலிடம் பிடித்துள்ளார். மைக்ரோசாப்ட் நிறுவனர் பில்கேட்ஸ் இரண்டாம் இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளார்.

### ஹபீஸ் சயீதைக் கைது செய்ய லாகூர் உயர் நீதிமன்றம் தடை

- ஜமாத் உத் தவா தலைவர் ஹபீஸ் சயீதை கைது செய்யக் கூடாது என்று லாகூர் உயர் நீதிமன்றம் அதிகாரிகளுக்குத் தடை விதித்துள்ளது.

- 2008 மும்பை பயங்கரவாதத் தாக்குதலின் பின்னணியில் மூளையாகச் செயல்பட்ட தீவிரவாதி இவர் என்று அமெரிக்கா, ஐநா, இந்தியா ஆகிய நாடுகள் அறிவித்ததையடுத்து அவர் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## பிரிட்டனின் சாலிஸ்பரி நகர ஓட்டலில் ரஷ்ய உளவாளி மீது ரசாயன தாக்குதல்

- ரஷ்ய ராணுவத்தில் மூத்த தளபதியாக பணியாற்றியவர் செர்ஜி ஸ்கேரிபால்.
- பிரிட்டனின் சாலிஸ்பரி நகர ஓட்டலில் செர்ஜி ஸ்கேரிபால் மீது மர்ம ரசாயன தாக்குதல் நடத்தப்பட்டது.
- இந்த தாக்குதலின் பின்னணியில் ரஷ்ய உளவாளிகள் இருப்பதாக பிரிட்டிஷ் உளவு அமைப்புகள் சந்தேதகம் தெரிவித்துள்ளன. இதனை ரஷ்ய வெளியுறவு அமைச்சகம் மறுத் துள்ளது.

## வணிகம்

## உயரதிகாரிகளுக்கு 19.3 லட்சம் பங்குகள் அளிப்பு: இன்ஃபோசிஸ் தகவல்

- இந்தியாவின் இரண்டாவது மிகப்பெரிய ஐடி நிறுவனமான இன்ஃபோசிஸ் முக்கியமான உயரதிகாரிகளுக்கு 19.3 லட்சம் பங்குகளை வழங்கி உள்ளது. புதிதாக பதவி ஏற்றிருக்கும் தலைமைச் செயல் அதிகாரி சலீல் பரேக்கிற்கு 1.13 லட்சம் பங்குகள் வழங்கப்பட்டிருக்கிறது.
- இதில் 84,768 பங்குகளை இரண்டு ஆண்டுகளுக்கு பிறகு பயன்படுத்திக்கொள்ள முடியும். மீதமுள்ள 28,226 பங்குகளை மூன்று ஆண்டுகளுக்கு பிறகு பயன்படுத்திக்கொள்ள முடியும். இந்த தகவலை பிஎஸ்இ-க்கு இன்ஃபோசிஸ் தெரிவித்திருக்கி றது.

## பெண் பணியாளர்களின் எண்ணிக்கையை 25 சதவீதமாக உயர்த்த டாடா மோட்டார்ஸ் இலக்கு

- டாடா மோட்டார்ஸ் நிறுவனம் பெண் பணியாளர்களின் எண்ணிக்கையை 25 சதவீதமாக உயர்த்த திட்டமிட்டுள்ளது.
- இதற்கேற்ப அடுத்த நான்கு முதல் ஐந்து ஆண்டுகளில் பெண் பணியாளர்களை பணிக்கு அமர்த்துவதை அதிகரிக்க உள்ளது.

## விளையாட்டு

### தாயகம் திரும்பிய கவுதம் கம்பீருக்கு புதிய பொறுப்பு

- 2018 ஐபிஎல் டி20 கிரிக்கெட் தொடரில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியிலிருந்து தாயகம் திரும்பிய கவுதம் கம்பீர் டெல்லி டேர் டெவில்ஸ் அணியின் கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார்.
- ஐபிஎல் ஏலத்தில் டெல்லி அணி உரிமையாளர் கவுதம் கம்பீரை ரூ.2.8 கோடிக்கு ஏலம் எடுத்தார்.

---***---